4th WTCF CEYLON RAPID

# CHESS OPEN

## VAVUNIYA

10-08-2025

WORLD TAMIL CHESS FEDERATION

WTCF

உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை

VAVUNIYA DISTRICT CHESS ASSOCIATION




வல்லாட்ட சிறப்புமலர்

உலகத்தமிழர் சதுரங்கப் பேரவை

World Tamil Chess Federation



## உள்ளடக்கம்

பக்கம்


4. உலகத் தமிழர் சதுரங்கப் பேரவையின் ஸ்தாபகர் கந்தையா சிங்கம் அவர்களின் செய்தி

5. உலகத் தமிழர் சதுரங்க பேரவையின் தலைவர் அவர்களது வாழ்த்துரை

6. வாழ்த்துச் செய்தி- வவுனியா மாவட்ட சதுரங்க சம்மேளனம்

7. CENTRAL COMMITTEE OF WTCT

8. 3RD WTCF 2024 CEYLON RAPID OPEN KILINOCHCHI RANKING

9. 2025 - ORGANIZING COMMITTEE

10-12. உலகத் தமிழர் சதுரங்கப் பேரவையின் எழுச்சியும் வளர்ச்சியும்

13. VAVUNIYA DISTRICT CHESS ASSOCIATION MEMBERS

14-15. `வல்லாட்டம்` என்று ஏன் செஸ் ஆட்டத்தினை அழைக்க வேண்டும்?

17. MESSAGE OF FELICITATION

18. WTCF 4TH CEYLON RAPID CHESS OPEN 2025 ARBITERS

19-20. சதுரங்கமும் வவுனியாவும்: அறிவையும் எதிர்காலத்தையும் கட்டியெழுப்பும் பயணம்

21. WTCF CEYLON CHESS TOURNAMENT 2025 DISTRICT COORDINATORS

22. 3RD WTCF 2024 CEYLON RAPID OPEN PHOTOS

# உலகத் தமிழர் சதுரங்கப் பேரவையின் ஸ்தாபகர் கந்தையா சிங்கம் அவர்களின் செய்தி



இலங்கையில் உலகத்தமிழர் சதுரங்கப் பேரவையால் வருடம் தோறும் நடாத்தப்படும் சதுரங்கப் போட்டி (வல்லாட்டப் போட்டி), இம்முறை வவுனியாவில் நடைபெறுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

அறிவுத் திறனை வளர்க்கும் சதுரங்க விளையாட்டை எமது மண்ணில் பரப்பி, எமது சந்ததிகளுக்காக அறிவுப் பயணத்துக்கு வித்திடுவது எமது முதன்மை நோக்கங்களில் ஒன்றாகும். 2021ஆம் ஆண்டு தொடக்கம் உலகத்தமிழர் சதுரங்கப் பேரவையினால் பல்வேறு மாவட்டங்களில் இந்தப் போட்டிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வருடம் வவுனியாவில் இந்தப் போட்டி நடைபெறுவது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

வவுனியா மாவட்ட மக்கள் இதன் வாயிலாக அதிகமாக பயனடைவார்கள் என நம்புகிறோம். மேலும், இந்நிகழ்வை வவுனியா சதுரங்கச் சங்கம் எம்முடன் இணைந்து ஏற்பாடு செய்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்று. எமது வேண்டுகோளுக்கு இணங்க, வவுனியா மாவட்ட அரச அதிபர் திரு. பி. ஏ. சரத்சந்திரா மற்றும் திரு. என். கமலாதாசன் (கூடுதல் மாவட்ட செயலாளர், வவுனியா) எமது நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக சிறப்பிக்க இருப்பது எமக்கு அதிக மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தருகின்றது.

இப்போட்டியை வெற்றிகரமாக நடாத்த எம்முடன் தோழமைபூர்வமாக பணியாற்றிய அனைவருக்கும் என் உள்ளம் கனிந்த நன்றியை தெரிவிக்கிறேன்.

**அன்புடன்**

**கந்தையா சிங்கம்**
**WTCF Founder**

# உலகத் தமிழர் சதுரங்க பேரவையின் தலைவர் அவர்களது வாழ்த்துரை



உலக தமிழர் சதுரங்க பேரவையின் (World Tamil Chess Federation -WTCF) இலங்கை கிளையின் நாலாவது «WTCF CEYLON RAPID CHESS OPEN» சதுரங்கப் போட்டி வருகின்ற 10 ஆகஸ்ட் 2025 வெற்றி நடைபெற உள்ளது. இந்த பேரவையின் ஸ்தாபகர் திரு கந்தையா சிங்கம் அவர்களின் சிந்தனையில் உருவானது தான் இந்த உலக தமிழர் சதுரங்க பேரவை. அவரின் திட்டமிடல், செயல் திறன் போன்றவைகளுக்கு வாழ்த்துக்கள்! அவருடன் சேர்ந்து சிறப்புடன் செயல்படும் செயல் குழுவினருக்கும் கடந்த நாலு வருடமாக ஆற்றும் கடின உழைப்புக்கு நன்றியும் வாழ்த்துக்கள். தொடர்ந்து ஆதரவு அளிக்கும் ஆதரவாளர்களுக்கும், அனுசரணையாளர்களுக்கும் பங்கேற்கும் போட்டியாளர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கும் தொடர்ந்து பயணிக்க வாழ்த்துகிறேன்.

தமிழ் சமூகத்தில் இப்படியான சதுரங்கப் போட்டிகள் மூலம் சிறந்த ஆளுமைகளை உருவாக்குவதே எமது குறிக்கோள்.

உலகத் தமிழர் சதுரங்க பேரவையின் தலைவராக சில தகவல்களை இங்கு பகிர விரும்புகின்றேன். சதுரங்க விளையாட்டு மற்ற விளையாட்டுகளை விட சற்றே நுட்பமானது, மூளைக்கும் கற்பனை ஓட்டத்திற்கும் வேலை கொடுத்து விளையாட வேண்டும். புதிர்களுக்கு விடை காண்பது போல நுட்பத்துடன் விளையாடினால் மாத்திரமே வெற்றி என்பது கிடைக்கும்.

இங்கு நேர கட்டுப்பாடு மிக முக்கியமானது. இந்த பயிற்சி வாழ்க்கையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முடிவு எடுக்கும் திறனை மேம்படுத்தும். இதனால் பிள்ளைகளின் ஆளுமை அதிகரிக்கும். எல்லா வயதினரும் பங்கு பற்ற கூடிய சதுரங்க விளையாட்டு நல்ல சமுதாயத்தை உருவாக்கும்.

தொன்மை மிகு விளையாட்டுக்கு பெருமை சேர்க்கும் நாள் ஜூலை 20 ஆம் தேதி. இது உலக சதுரங்க நாளாகும். இது எந்த விளையாட்டுக்கும் இல்லாத ஒரு சிறப்பு. வவுனியாவில் நடக்க இருக்கும் இந்த நாலாவது போட்டி மேலும் சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்கள்!

**- ரகுராஜ் தர்மரத்தினம்**
**தலைவர் (WTCF)**

# வாழ்த்துச் செய்தி
# வவுனியா மாவட்ட சதுரங்க சம்மேளனம்



வவுனியாவில் முதன்முறையாக நடைபெறும் நான்காவது உலகத் தமிழர் சதுரங்கப் பேரவையின் WTCF Ceylon Rapid Chess Open 2025 போட்டிக்கான இவ்வேளை, எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், இதயம் கனிந்த பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் போட்டி, நமது மாவட்டத்திற்கு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லாகும், ஏனெனில் இது உள்ளூர் வீரர்களுக்கு Swiss-system Rapid Chess format (20+5) இனை அறிமுகப்படுத்துகிறது, இது அவர்களுக்கு போட்டித் தரங்களை அனுபவிக்கவும், நம்பிக்கையை வளர்க்கவும், அவர்களின் திறமையை ஒரு பெரிய மேடையில் வெளிப்படுத்தவும் ஒரு மதிப்புமிக்க வாய்ப்பை வழங்குகிறது.

சதுரங்கம் வெறும் விளையாட்டு மட்டுமல்ல, அறிவுசார் வளர்ச்சி, ஒழுக்கம் மற்றும் மூலோபாய சிந்தனைக்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். இந்த நிகழ்வின் மூலமும், பாடசாலைகள் மட்டத்தில் நடத்தப்படும் விழிப்புணர்வு செயற்திட்டங்கள், பயிற்சிகள் மற்றும் Rating சார்ந்த பயிற்சிகளின் மூலமும், வவுனியா மாவட்ட சதுரங்க சம்மேளனம், இளம் மாணவர்களை வளர்ப்பதற்கும், நமது மாவட்டத்தில் சதுரங்க கலாச்சாரத்தை வலுப்படுத்துவதற்கும் தொடர்ந்து உறுதிபூண்டுள்ளது.

உலகத் தமிழர் சதுரங்கப் பேரவையின் ஒத்துழைப்புக்களிற்கும், வவுனியா மாவட்டச் செயலகத்தின் அசைக்க முடியாத ஆதரவிற்கும், எங்கள் ஆதரவாளர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் பங்களிப்புகளுக்கும், அனைத்து போட்டியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆர்வமுள்ள ஈடுபாட்டிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்வு, இளைஞர்கள் சதுரங்கத்தின் மகிமையை உணரவும், சதுரங்க அரங்கில் வவுனியாவின் பெயரை இன்னும் உயரத்திற்கு கொண்டு செல்லவும் அதிக இளைஞர்களை ஊக்குவிக்கட்டும்.

*போட்டி வெற்றிகரமாக அமைய மனமார்ந்த வாழ்த்துக்கள்!*

**இ. சுபாநந்தன்**
**தலைவர் - வவுனியா மாவட்ட**
**சதுரங்க சம்மேளனம்**

# Central Committee of WTCF



Mr.Kandiah Singam
Founder



Mr.Dharmaratnam Raguraj
President



Mr.Niranjan Yogeswaran



Mr.Vijitharan Vijayaratnam



Mr.Anton Amarapala



Mr.Rajan Sagathevan



Mr.Saimaruhan



Mr.Santhirabalan Nirmalarajah



Mr.Dharmaratnam Kajan



Mr.V.E. Kuganathan



Mr.Ananthy Vijayarajah

# 3rd WTCF 2024 CEYLON RAPID OPEN
# KILINOCHCHI RANKING

### Open
1 Thangarajah Selvakumar *Champion*
2 Tharmasanthiran Brahman
3 Kumukkesan Vithyasagar
4 Joseph Dilukshan
5 Vikkineswaran Dishanthan
6 Thavaraja Saipriyan
7 Niruthaman Dias Thaboshan Dias

### Under 11 Boys
1. Sasimaran Saruksayan *Champion*
2. Subhananthan Ashvin
3. Aingaran Akshithan

### Under 11 Girls
1. Tharmaseelan Sharnija *Champion*
2. Yasinthavanathan Theepiga
3. Kamalarajan Kirushnavy

### Best Women
Rajan Rajan Rovinda

### Under 15 Boys
1 Subaskaran Santhosh *Champion*
2 Piratheepan Sam Denin
3 Jesugunarasa Udayanithi

### Under 15 Girls
1 Puvanenthiran Nanthusha *Champion*
2 Paramothayan Pranajaa
3 Vathanakanthan Darshika

### Under 13 Girls
1 Baanugopan Vaisnavi *Champion*
2 Karunanithy Kishobi
3 Sritharan Keshavi

### Under 13 Boys
1 Thayanandarajan Keerthikan *Champion*
2 Karan Thabotharan
3 Lingarajah Thashwin



# 2025
# ORGANIZING COMMITTEE



*Back L-R :*

Mr.Maragathacumar Balakumar, Mr.Subramaniam Nirojan, Mr.Sivathasan Athavan,

*Front L-R :*

Miss. Yathusha Kuganesan, Mr.Ratnam Sabhananthan, Mr. Kandiah Singam

# உலகத் தமிழர் சதுரங்க பேரவையின் எழுச்சியும் வளர்ச்சியும்

சதுரங்கம் (வல்லாட்டம்) இந்தியாவில் தோன்றிய ஒரு பாரம்பரிய விளையாட்டாகும். தமிழர்கள் இவ்விளையாட்டில் ஆர்வமும், திறமையும் கொண்டவர்களாக விளங்குகின்றனர். இவ்விளையாட்டின் ஊடாக உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்களை ஒன்றிணைக்கும் நோக்குடன் உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை (World Tamil Chess Federation – WTCF) நிறுவப்பட்டது.

## அமைப்பின் உருவாக்கமும் வளர்ச்சியும்

WTCF அமைப்பு அதன் ஸ்தாபகர் திரு கந்தையா சிங்கம் அவர்களின் நீண்ட நாள் முயற்சியின் பயனாக 05.10.2019அன்று பிரித்தானியாவை மையமாகக் கொண்டு உருவானது. பல்வேறு நாடுகளிலிருந்தும் உறுப்பினர்களை இணைத்து, திரு ரகுராஜ் தர்மரட்ணம் தலைமையிலான நிர்வாகம் அமைக்கப்பட்டது. தற்போது அமைப்பின் மத்திய குழுவில் 11 உறுப்பினர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

இது ஒரு லாப நோக்கமற்ற அமைப்பாக செயற்படுகிறது, அதன் முக்கிய நோக்கம் சதுரங்கத்தின் ஊடாக தமிழர் சமூக வளர்ச்சியையும், ஒற்றுமையையும் கட்டியெழுப்புவதாகும்.

## முக்கிய நோக்கங்கள்

- உலகத் தமிழர்களை சதுரங்கத்தின் மூலம் ஒன்றிணைத்தல்
- தமிழ் மாணவர்களிடையே சதுரங்கம் மீது ஆர்வத்தை வளர்த்தல்
- சதுரங்க வல்லுனர்கள் மற்றும் ஆர்வலர்களுடன் தொடர்பு ஏற்படுத்தி, அந்தந்த நாடுகளில் விளையாட்டை ஊக்குவித்தல்
- தமிழர்கள் அந்நாட்டு சதுரங்க சங்கங்களில் உறுப்பினர்களாக இணைவதற்கான வழிவகை
- இளம் சந்ததியினரை உலக தரத்தில் போட்டியிடக் கூடிய வீரர்களாக உருவாக்குதல்
- பயிலரங்குகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்
- சர்வதேச தரத்தில் போட்டிகளை நடத்துதல்
- தேர்ந்தெடுக்கப்படும் திறமைமிக்க வீரர்களுக்காக சிறப்பு பயிற்சிகளை வழங்குதல்

- போர்சிக்கல்களால் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு சதுரங்கத்தை மன அமைதிக்கான ஒரு வழியாக அறிமுகப்படுத்துதல்
- திறமை இருந்தும் வசதியின்றி இருப்பவர்களுக்கு உதவிகள், ஊக்கங்கள் வழங்குதல்

## இணையவழிப் போட்டிகள்

Covid-19 காரணமாக, WTCF தனது முதல் சர்வதேச சதுரங்கப் போட்டியை 13.09.2020 அன்று ஆன்லைன் மூலம் நடத்தியது. இதில் 21 நாடுகளிலிருந்து 400க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றனர். வெற்றியாளர்களுக்கு மொத்தம் 345 அமெரிக்க டாலர்கள் பரிசாக வழங்கப்பட்டது.

## அடுத்து நடத்தப்பட்ட முக்கியமான இணையவழிப் போட்டிகள்:

- **13.09.2020** - அனுசரணை: Sugun (UK), Learn2Drive (Norway), Engel Paradis (Norway)
- **20.12.2020** - அனுசரணை: நோர்வே தமிழ்ச் சங்கம்
- **28.03.2021** - அனுசரணை: அமரர் கு.ப. இரக்சகபாலன் குடும்பம்
- **24.10.2021** - அனுசரணை: WTCF
- **22.&29.01.2023** - (Gold & Silver)
  அனுசரணை: அமரர் கு. ப. இரக்சகபாலன் குடும்பம்

## WTCF LONDON RAPID OPEN

WTCF, 2022-ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் London Rapid Open சதுரங்கப் போட்டிகளை நடத்தி வருகிறது.

- **21.05.2023** - அனுசரணை: Lotus Caring Hands, Embon, Ellalan
- **24.03.2024** - அனுசரணை: Lotus Caring Hands, FCBC, VTS.UK, EDUCO UK
- **23.03.2025** - அனுசரணை: Lotus Caring Hands, FCBC, SPOT On Money

இவை அனைத்தும் Alperton Community High School, London இல் நடைபெற்றன. இந்த போட்டிகளில் வேற்றின மக்களும் ஆர்வமுடன் பங்கேற்று வெற்றிப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் WTCF இன் செயற்பாடுகள்

WTCF இலங்கையில் நேரடி மற்றும் இணையவழி சதுரங்கப் போட்டிகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.

### WTCF CEYLON RAPID CHESS OPEN:

1. **05.02.2022** - யாழ்ப்பாணம், வேந்தன் கலைக் கல்லூரி
2. **25-26.03.2023** - கொக்குவில் இந்துக் கல்லூரி
3. **15.06.2024** - MAS KREEDA VAANAVIL, கிளிநொச்சி
4. **19.07.2025** - கந்தசாமி மண்டபம், வவுனியா (திட்டமிட்ட நிகழ்வு)

## இணையவழி சிறப்பு பயிற்சி முகாம்

மேலும், 2025 மே மாதம் முதல், Northern Uni மற்றும் இந்திய சதுரங்க பயிற்சியாளர் ஒருவரின் வழிகாட்டலுடன், இலங்கையில் உள்ள மாணவர்களுக்கு இணையவழி சிறப்பு பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது.

## ஊடகங்கள் மற்றும் இயக்க முறைகள்

WTCF தனது பணிகளை இணையதளம், சமூக ஊடகங்கள், நேரடி பயிற்சிகள், போட்டிகள் ஆகியவையின் மூலம் பரப்பி வருகிறது. தமிழ்ச் சமூகத்தில் சதுரங்க விளையாட்டை வளர்ப்பதிலும், உலகளவில் தமிழரின் மதிப்பை உயர்த்துவதிலும் இது முக்கிய பங்கு வகிக்கிறது.

இன்றைக்கு **உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை** (WTCF), தமிழர் அறிவுக்கும் பாரம்பரியத்திற்குமான வெளிப்பாடாகவும், உலகளவில் தமிழரின் சுயமரியாதையை உயர்த்தும் முன்னணி அமைப்பாக திகழ்கிறது.



**Mrs Ananthy Vijayarajah**
*Member of WTCF*

# VAVUNIYA DISTRICT CHESS ASSOCIATION MEMBERS



## Executive Committee

*Seated (L to R)*

| | |
|---|---|
| 1. Hon. Secretary: Mr. P. Thusitharan | (+94 77 815 5647) |
| 2. Hon. Vice Secretary Mr. V. Vipulananth | (+94 77337 4524) |
| 3. Hon. President: Eng. R. Subhananthan | (+94 77 363 2737) |
| 4. Hon. Vice President: Mr. K. Jeyakoban | (+94 77 797 8585) |
| 5. Hon. Treasurer:K. Partheepan | (+94 77 959 6648) |

## Committe Members

*Standing (L to R)*

1. Mrs. J . Kalaiyarasi
2. Mr. A. Vishnuthashan
3. Mr. J. Kamalatheepan
4. Mr. K. Piratheepan
5. Mr. R. Mathushan
6. Mrs. Y. Sasikala

# `வல்லாட்டம்` என்று ஏன் செஸ் ஆட்டத்தினை அழைக்க வேண்டும்?



செஸ் ஆட்டத்தினைத் தமிழில் சதுரங்கம் என்றே பலரும் அழைக்கின்றோம், உண்மையில் `சதுரங்கம்` (சதுரம் + அங்கம்) என்ற சொல்லானது தூய தமிழ்ச் சொல்லன்று. செஸ் ஆட்டத்தினைத் தமிழில் அழைக்கப் பொருத்தமான சொல் `வல்லாட்டம்` என்பதேயாகும். இங்கு நாம் `வல்லாட்டம்` எனும் போது, ஒரு தமிழ்ச் சொல்லினைப் பயன்படுத்துவது மட்டுமன்றி, ஒரு வரலாற்றினையும் மீட்டு எடுக்கின்றோம். செஸ் ஆட்டமானது குப்தர் காலத்தில் இந்தியாவில் தோன்றி, பாரசீகத்துக்குச் சென்று, அங்கிருந்து ஐரோப்பாவுக்குச் சென்றது என்றே சொல்வர். இங்கு குப்தர் காலம் என பொது ஆண்டு நான்காம் நூற்றாண்டு முதல் பொது ஆண்டு ஆறாம் நூ ற்றாண்டு வரையான காலத்தினைச் சொல்வர். இக் காலப் பகுதியிலேயே செஸ் தோன்றியதாகவும், அதன் அப்போதைய பெயர் `சதுரங்கா` எனவும் சொல்வர். அண்மைக் காலத்தில் கீழடி, வெம்பக்கோட்டை போன்ற தமிழ்நாட்டின் சில இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் சங்க காலத்தினைச் சேர்ந்த ஆட்டக்காய்கள் கிடைத்துள்ளன. அவை கீழடி அருங்காட்சியகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு சங்ககாலம் என்பது குப்தர் காலத்தினை விடப் பல நூற்றாண்டுகள் காலத்தால் முந்திய காலம் என்பதும், குப்தர் காலத்துக்கு முன்னரே தமிழரிடம் இந்தாட்டம் இருந்துள்ளதும் நோக்கப்படவேண்டும் . அவ்வாறு சங்ககாலத்தில் இருந்த இவ்வாட்டத்தினையே தமிழர் வல்லாட்டம் என அழைத்தனர்.

`வல்` என்றால் நகர்வு என்ற பொருளுமுண்டு {நோக்குக - வலவன் ஏவா வானூர்தி அல்லது நகர்த்துபவன் இல்லாத வானூர்தி}, இந்த வகையிலேயே காய்களை நகர்த்தி ஆடப்படும் ஆட்டம் என்பதால் வல்லாட்டம் என்ற பெயர் ஏற்பட்டது. வல்லுப்பலகை, வல்லுக்காய் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்திலுண்டு. வல்லுப்பலகையின் வடிவம் பற்றிக் கலித்தொகை


பாடுகின்றது (கலித்தொகை 94: 13-15). பதற்றத்துடன் தலை குனிந்து (பலகையில் கவனத்தினைக் குவிப்பதற்காகத் தலை குனிந்து) மூதாளர் வல்லு ஆடிய செய்தியினை அகநானூறு கூறுகின்றது (அகநானூறு 377:7-10). புறநானூறு 52 ஆவது பாடலில் காய்கள் பலகையில் நகர்த்தி வல்லாட்டம் ஆடிய செய்தி சொல்லப்படுகின்றது ( புறநானூறு 52: 14-15). பரிபாடலில் `வல்லுப்போர் வல்லாய்` என வல்லாட்டத்தின் போர்ப் பண்பு கூறப்படுகின்றது. குற்றாலக் குறவஞ்சியில் சொல்லப்படும் வல்லுக்காயின் வடிவம் இன்றும் நாம் ஆடுகின்ற காலாள் ( Pawn ) எனும் காயின் வடிவினைக் கண்முன் கொண்டு வருகின்றது. இவ்வாறு இலக்கியச் சான்றுகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

தமிழரிடம் முதலில் கட்டாட்டம் தோன்றுகின்றது. மூன்று வகையான கட்டாட்டங்கள் தமிழரிடமிருந்துள்ளன. அவற்றின் அடுத்த கட்ட வளர்ச்சியாக `ஆடு புலி ஆட்டம்` காணப்படும். இந்த வரிசையில் தோன்றியதே வல்லாட்டம் என்பதாகும். தமிழரின் உலகுக்கான கொடையே வல்லாட்டம், அதனையே இன்று செஸ் என்கின்றோம். இன்றைய வடிவமானது ஒரு படிமலர்ச்சி மூலமாவே வந்தடைந்தது எனினும் அதன் தோற்றமானது தமிழரிடமே தொடங்கியது. எனவே செஸ் ஆட்டத்தினை வல்லாட்டம் எனத் தமிழில் நாம் அழைக்கும் போது, ஒரு தமிழ்ச் சொல்லினைப் பயன்படுத்துவது மட்டுமன்றி, நாம் மறந்து போன ஒரு வரலாற்றுப் பெருமையினையும் மீட்டு எடுக்கின்றோம்.

**குறிப்பு** - *வல்லாட்டம் பற்றி விரிவாக அறிந்து கொள்ள, நூலகம் இணையத்தளத்திலுள்ள (noolaham.org), வி.இ.குகநாதன் எழுதிய `வல்லாட்டம்` என்ற நூலினை இலவயமாகத் தரவிறக்கிப் படித்துக் கொள்க.*



**- இலங்கநாதன்**
**குகநாதன்**


WORLD TAMIL CHESS FEDERATION
WTCF
உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை
உலகத் தமிழர் சதுரங்கப்
பேரவை நடத்தும்
4TH WTCF CEYLON RAPID
CHESS
OPEN - 2025
இணை அனுசரணை
UTSIKTEN PARTY - NORWAY
GKA DIGITAL VISION - NORWAY
மொத்த பரிசுத் தொகை 125000.00 ரூபா
300
போட்டியாளர்கள் மட்டுமே
இடம் : கந்தசாமி கோவில் மண்டபம், வவுனியா
திகதி : 10.08.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 முதல் மாலை 5.30 வரை
30 June 2025
விண்ணப்பமுடிவுத் திகதி
www.worldtamilchess.com
admin@worldtamilchess.com

# MESSAGE OF FELICITATION



I, P.A. Sarathchandra, District Secretary, District Secretariat, Vavuniya, am profoundly honored to extend my heartfelt felicitations to the Vavuniya District Chess Association (VDCA) and the World Tamil Chess Federation (WTCF) on the landmark occasion of the 4th WTCF Ceylon Rapid Chess Open 2025, to be held on 10th August 2025 at Kandasamy Hall, Vavuniya.

The VDCA has demonstrated unwavering dedication to cultivating chess as a transformative force in our district. Through initiatives like chess workshops at V/Nedunkerny Maha Vidyalayam, V/Puthukkulam Junior School, and Tharanikkulam Ganesh Vidhyalayam, the association has not only introduced the game to young minds but also donated chessboards and imparted critical FIDE-rated tournament knowledge, empowering students with strategic thinking and discipline. Their efforts to establish school chess clubs and integrate chess into educational frameworks reflect a visionary approach to youth development.

Equally commendable is the World Tamil Chess Federation's (WTCF) global mission to unite Tamil communities through chess. Their endeavors—from conducting international competitions like the WTCF 3rd London Rapid Open to providing specialized training for talented players—highlight a commitment to excellence and inclusivity. WTCF's focus on supporting war-affected youth and fostering psychological resilience through chess resonates deeply with our shared values of empowerment and unity.

This tournament, held in a Swiss-system rapid format (20+5), stands as a testament to the collaborative spirit between the VDCA and WTCF. It marks a historic milestone for Vavuniya, highlighting the district's emerging role as a hub for intellectual sports. The participation of over 300 players reflects not only the rising enthusiasm for chess but also the exceptional organizational capabilities of both federations.

I extend my deepest gratitude to the organizers, sponsors, volunteers, educators, and parents whose tireless efforts have made this event possible. Your collective dedication is shaping a brighter future for our youth, where chess serves as a tool for character-building and intellectual growth.

To all participants: May this tournament ignite a passion for excellence, camaraderie, and lifelong learning. Let every move on the board inspire resilience and creativity.

*With warm regards,*

**P.A. Sarathchandra,**
*District Secretary, Vavuniya*

# WTCF 4TH CEYLON RAPID CHESS OPEN 2025

## *ARBITERS*



**MR. THIRUNAVATKARASU SIVARUBAN**
*(Chief Arbiter)*



**MR. SHAKEER AHAMAD**
*( Arbiter)*



**MR. KANTHASAMY AATHITHAN**
*(Arbiter)*



**MR.VIKNESWARAN DISHANTHAN**
*( Arbiter)*



**MR.SRIRAMESHKUMAR ANUJAN**
*( Arbiter)*



**MR.SUBRAMANIAM NIROJAN,**
*( Computer Arbiter)*

# சதுரங்கமும் வவுனியாவும்

# அறிவையும் எதிர்காலத்தையும் கட்டியெழுப்பும் பயணம்

சதுரங்கம் (Chess) என்பது வெறும் விளையாட்டு மட்டுமல்ல. இது ஒருவரின் நினைவு திறன், ஒழுக்கம் மற்றும் சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்தும் அறிவுப் பயிற்சி கருவியாகும். இந்தப் பன்முகத்தன்மையினால், சமீப வருடங்களில் வவுனியா மாவட்டத்தில் சதுரங்க விளையாட்டு வலுவாக வளர்ந்து வருகிறது. இந்த வளர்ச்சிக்கு மூலக் காரணமாக வவுனியா மாவட்ட சதுரங்க சம்மேளனம் (Vavuniya District Chess Association - VDCA), வவுனியா மாவட்ட பாடசாலைகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பிள்ளைகளுடன் அவர்களின் பெற்றோர்களது ஆர்வமும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

வட மாகாணத்தில் அமைந்துள்ள வவுனியா, கல்வி மற்றும் இளைஞர் வளர்ச்சியை முக்கியமாகக் கொண்ட ஒரு மாவட்டமாக விளங்குகிறது. சதுரங்கம், இளைஞர்களின் புத்திசாலித்தனத்தை ஊக்குவிப்பதற்கான சக்திவாய்ந்த வழியாக விளங்குகிறது. மொழி, சமூகப் பின்னணி மற்றும் பொருளாதார நிலைமை போன்ற எந்த விதமான தடைகளும் இல்லாமல், ஒவ்வொருவருக்கும் வெற்றி பெற சம வாய்ப்பை வழங்கும் இது ஒரு சமத்துவ விளையாட்டாக திகழ்கிறது.

VDCA பாடசாலை மட்ட சதுரங்க விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், Coaching camps across the district, Training sessions, மற்றும் tournaments உள்ளிட்டவற்றை ஏற்பாடு செய்வதன் மூலம் இவ்விளையாட்டை எல்லா மாணவர்களிடமும் கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக, புறநகர் மற்றும் வறுமைக் கோட்டுக்குள் உள்ள மாணவர்களுக்கு சதுரங்கத்தை அறிமுகம் செய்யும் திட்டங்கள், தங்கள் வாழ்க்கையை மாற்றியமைக்கும் வாய்ப்புகளை உருவாக்குகின்றன.

இந்த முயற்சிகளில் மாணவர்களின் ஆர்வமே மிகுந்த பலத்தை உருவாக்கியுள்ளது. VDCA மூலம் சதுரங்கம் கற்ற மாணவர்கள் பலர் District, Provincial மற்றும் National-level tournaments இல் பங்கேற்று முன்னேறியுள்ளனர். இவை தனிநபரின் சாதனைகளை மட்டும் பிரதிபலிக்காமல், வவுனியாவின் வளர்ந்துவரும் சதுரங்க சூழ்நிலையின் பலத்தையும் காட்டுகின்றன.

மேலும், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இந்த சம்மேளனத்துக்கு உறுதுணையாக இருக்கின்றனர். அவர்கள் சதுரங்கத்தை ஒரு பொழுதுபோக்கு மட்டுமல்ல, மாணவர்களின் கிரகிக்கும் ஆற்றல், நினைவு திறன், பொறுமை மற்றும் முடிவு எடுக்கும் திறன்களை வளர்க்கும் பயிற்சியாக காண்கிறார்கள்.

2025ம் ஆண்டில் வவுனியாவில் நடைபெறும் 4வது WTCF Ceylon Rapid Chess Open போட்டி, இந்த வளர்ச்சியின் முக்கியக் கட்டமாக அமைகிறது. இது Swiss system (20+5 time control) முறையில் நடைபெறும் முதல் Rapid Format இல் நடைபெறும் போட்டியாகும். இது வவுனியாவை தேசிய சதுரங்க வரலாற்றில் ஒரு முக்கிய மையமாக மாற்றும்.

District Secretariat, கல்வித் திணைக்களங்கள் மற்றும் Sponsors ஆகியோரின் தொடர்ச்சியான ஆதரவுடன் VDCA அதன் நடவடிக்கைகளை விரிவாக்க திட்டத்தில் உள்ளது. மேலும் பல பாடசாலைகளுக்கு Chess boards வழங்குதல், Coach க்கான செயலமர்வுகளையும் பயிற்சிகளையும் வழங்குதல், மற்றும் FIDE rating பெற்ற போட்டிகள் ஏற்பாடு செய்வதும் எதிர்கால இலக்குகள் ஆகும்.

துரிதமாய் நகரும் உலகில் சதுரங்கம், எதிர்கால தலைமுறையை முன்னேறிச் சிந்திக்கத் தயார்படுத்துகிறது ஒவ்வொரு செஸ் நகர்விலும் ஒரே நோக்கம். இந்த உயர்நோக்குடன், வவுனியா தனது அடித்தளத்தை அமைத்து விட்டது.




**ஆக்கம்**
Eng R Subhananthan
The President
Vavuniya District
Chess Association

# WTCF CEYLON CHESS TOURNAMENT
# 2025 DISTRICT COORDINATORS

| | |
|---|---|
| MR. RATNAM SUBHANANTHAN | *VAVUNIYA* |
| MR. NANTHARUBAN | *JAFFNA* |
| MR. THIRUNAVATKARASU SIVARUBAN | *KILINOCHCHI* |
| MR. JESURAJA JERAMY | *MANNAR* |
| MR. SUBRAMANIAM SUJANTHAN | *MULLAITHIVU* |
| MR. JOSEF DILUXSAN | *TRINCOMALEE* |
| MR. M.P.KUHATHARAN | *BATTICOALA* |
| MR. SHAKEER AHAMAD | *AMPAARAI* |











WORLD TAMIL CHESS FEDERATION

WTCF

உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை

**For more info contact WTCF**

**www.worldtamilchess.com.**

**admin@worldtamilchess.com**

**WTCT Founder +41 7860 21781**

**WTCT President +44 7940 465323**


creative mind

## THE BEST GRAPHIC BRAND YOU CAN TRUST

BANNERS | FLYERS | BROCHURES | BUSINESS CARDS | LOGOS
LETTERHEAD | INVITATIONS | BOOK COVERS | INFOGRAPHICS ETC..

உங்கள் அனைத்து கிராபிக்ஸ் டிசைன் தேவைகளுக்கும்
எம்மை தொடர்புகொள்ளவும்....

0777 746 258

suren.encl@gmail.com

# OUR SPONSORS

NAME: Gunalan
org no - 998537657

004798235120

G.K.A
Digital Vision
Video & Photo, Video Editing, Album Designing

**GKA DIGITAL VISION IN NORWAY**

UTSIKTEN
www.utsikten.no
92812176

**Utsikten party venue in Norway**